

மதுரை மாநகர் மாவட்டக் கழக முன்னோடியும் மாநகரக் கழகத் தோழர் ச.தாமோதரனின் தந்தையுமான வெ.சண்முகம் சமீபத்தில் மறைவெய்தியதையொட்டி அன்னாரது இல்லத்துக்கு முன்னாள் அமைச்சரும் விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான தங்கம் தென்னரசு சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது எஸ்.எஸ்.தென்னரசு மருமகன் டாக்டர் கே.அருணாசலம், சண்முக தாமோதரன், அம்மா பிச்சைகனி மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை வடக்கு ஒன்றியம்,

# ஞாலம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றினார்!

*கன்னியாகுமரி, ஜூலை 15 -*

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றியம், ஞாலம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது அந்தரபுரம், சமூக நலக்கூடத்தில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம் பிள்ளை தலைமையில், தோவாளை வடக்கு ஒன்றிய செயலாளர் மோ. பிராங்கிளின் முன்னிலையில் நடைபெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், முன்னாள் ஞாலம் ஊராட்சி மன்றத் தலைவர் மு.சதீஷ், ஒன்றிய பொருளாளர் T.கண்ணன் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஞாலம் ஊராட்சி மக்கள் பயன்படும் வகையில் இயங்கி வந்த 4R ஊரக் கோணம் மற்றும் 4C அருமநல்லூர் D சர்வீஸ் பேருந்தானது கடந்த இரு மாதங்களாக இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டுள் ளது.

இதனால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்லும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

எனவே இந்த இரு பேருந்துகளையும் மீண்டும் இயக்க வேண்டி நாகர்கோவில் அரசு போக்குவரத்து பொது மேலாளர் அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஞாலம் ஊராட்சி நைனார் பொத்தை பகுதியில் ஆற்று பாலம் கட்டி தரவும் மற்றும் கல்லறை தோட்டம் செல்வதற்காக சாலை வசதி ஏற்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ள ஊராட்சி நிர்வாகம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஞாலம் ஊராட்சி விவசாயிகளின் கோரிக்கையான பள்ளி கொண்டான் கால்வாயினை உடனே தூர்வார வேண்டி மாவட்ட நீர்வளத்துறை அதிகாரிகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.க மற்றும் தோவாளை வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் உற்ற நண்பர் – மறைந்த

# திருவாரூர் கு.தென்னன் மகன் கு.தெ.முத்து மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஜூலை 15-*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நெருங்கிய நண்பரும், திருவாரூர் நகர் மன்ற முன்னாள் தலைவருமான கு.தென்னன் அவர்களின் மகன் கு.தெ.முத்து அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 68.



மறைந்த கு.தெ.முத்து அவர்களுக்கு உஷா என்கிற மனைவியும், கண்மணி என்கிற மகளும், கலைமணி என்கிற மகளும் உள்ளனர். இவரது சகோதரர் கு.தெ.சம்பத் திருவாரூர் நகர்மன்ற நியமன உறுப்பினர் ஆவார்.

சிறந்த கழக கொள்கை விளக்கப் பேச்சாளரான கு.தெ.முத்து அவர்கள் திருவாரூர் நகர இளைஞரணி அமைப்பாளராகவும், திருவாரூர் நகர தி.மு.க. அமைப்பாளராகவும், மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினராகவும், 1996-2001ல் திருவாரூர் நகர் மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டவர். தற்போது மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளராக பொறுப்பினை வகித்து வந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கு.தெ.முத்து அவர்களின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக்கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ், ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ. தேவா மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் பிரிவால் வாடும் அவரது கும்பத்தினருக்கு தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

மறைந்த கு.தெ.முத்து அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று 14.07.2026. செவ்வாய் மாலை 3.00 மணிக்கு திருவாரூர் அய்யனார் கோயில்தெரு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

## முதல்வரின் தனிப் பிரிவுக்கு மனு அளித்த பெண்!

### சென்னை தலைமைச் செயலகத்தில் தீக்குளிக்க முயற்சி!

சென்னை, ஜூலை 15 –

சென்னை, தலைமை செயலகத்தில் உள்ள முதல்வரின் தனி பிரிவில், தினசரி ஏராளமானோர் வந்து தங்கள் பிரச்சினைகளை கோரிக்கை மனுவாக அளிப்பது வழக்கம்.

இந்நிலையில், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தைச் சேர்ந்த சாமுண்டீஸ்வரி (32) என்பவர் தலைமை செயலகம் வந்தார்.

தலைமைச் செயலகம் உள்ளே செல்ல அனைவரும் காவல்துறையின் சோதனைக்காக நின்று கொண்டிருந்த போது, சாமுண்டீஸ்வரி திடீரென தனது தலையிலும், உடலிலும் டீசலை ஊற்றிக் கொள்ள முயன்றார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர், உடனடியாக சென்று அப்பெண்ணை தடுத்து நிறுத்தினர்.

அவரிடமிருந்த டீசல் கேனைப் பறிமுதல் செய்த போலீஸார், அவர் மீது தண்ணீரை ஊற்றி பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்றனர். முதற்கட்ட விசாரணையில், சாமுண்டீஸ்வரி ஏற்கனவே தனது பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் தனிப் பிரிவில் புகார் மனு ஒன்றை அளித்திருந்ததாகவும், அந்தப் புகார் மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப் படாததால் அவர் இந்த முடிவை எடுத்ததாக தெரிய வந்தது.



எட்டையபுரத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில் வழக்கறிஞர் சங்க நிர்வாகிகளுக்கான அடிப்படை தேவைகள் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், எட்டையபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், எட்டையபுரம் பேரூர் கழகச் செயலாளர் பாரதி, கணேசன் வழக்கறிஞர்கள் சிந்தலக்கரை சுப்புராஜ், அஜய்குமார் மாவட்ட பிரதிநிதி கல்லடிவீரன் வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆவுடையப்பன் வடக்கு மாவட்டப் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சென்றாயப்பெருமாள் வார்டு செயலாளர்கள் ராமர்,அருள்சுந்தர் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.

# தூத்துக்குடி - போல்பேட்டை பகுதிக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் சிறப்புரையாற்றினார்!

*தூத்துக்குடி, ஜூலை 15 -*

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் போல்பேட்டை பகுதி திமுக செயல்வீரர்கள் கூட்டம் 13.07.2026 அன்று மாலை 6 மணி அளவில் கலைஞர் அரங்கில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




கூட்டத்துக்கு போல்பேட்டை பகுதி செயலாளர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாநகர கழக செயலாளர் எஸ். ஆர் ஆனந்தசேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநகர அவைத்தலைவர் ஏசுதாசன் , மாநகர துணை செயலாளர் கீதா முருகேசன், பிரமிளா, சி.எஸ்.முரளிதரன், மாவட்ட அணி அமைப்பாளர் கவிதா , மாவட்ட பிரதிநிதிகள் நாராயணன், செல்வகுமார், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு 75 ஆண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகும். தமிழ்நாட்டை திமுக ஆட்சியின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியதும், பொருளாதாரத்தில் தமிழ்நாட்டைமுன்னேற்றியதும் தி.மு.க. அரசு என்பதை யாராலும் மறுக்க இயலாது.

இன்றைய நவீன தமிழ்நாட்டை உருவாக்கியதும் தி.மு.க. அரசு தான். பொருளாதாரத்தில் இரட்டை இலக்க வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி என ஒட்டு மொத்த தமிழ்நாட்டையும் வளர்ச்சியை நோக்கி முன்னெடுத்து அழைத்து சென்ற தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை பற்றியும் திராவிட முன்னேற்ற கழகத்தை பற்றியும்

மனித மாண்பை மீறி கரூர் பொதுக்கூட்டத்தில் அநாகரிகமாக பொய் செய்திகளை பேசிய தவெக அரசின் முதல்வர் விஜய்யை கண்டித்தும், கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து காமராஜருக்கு பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

காங்கிரஸ் கட்சி கைவிட்ட கர்மவீரர் காமராஜர் மறைந்தபோது அவருக்கு உரிய அரசு மரியாதையை அளித்து அவரை நல்லடக்கம் செய்தது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கன்னியாகுமரியில் மணிமண்டபம் அமைத்து அவருக்கு பெருமை சேர்த்தது தி.மு. க.ழக அரசு. சென்னை மெரீனா சாலைக்கு காமராஜர் சாலை என்று பெயர் சூட்டியது தி.மு.கழக அரசு.

சென்னை உள்நாட்டு விமானநிலையத்துக்கு காமராஜரின் பெயர் சூட்டி அழகு பார்த்தது தி.மு.கழக அரசு.

அந்த எளிமையின் சிகரம் காமராஜருக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஜூலை 15ம் தேதி அவரது 124வது பிறந்த நாளை போல்பேட்டை பகுதி கழகம் சார்பில் சிறப்பாக இனிப்புகள் வழங்கி கொண்டாடுவது என்றும் தி.மு.க.வின் கொள்கைகளான சமூக நீதி, சமத்துவம், அனைவருக்கும் சமவாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகிய கொள்கைகளை பற்றியும், அந்த கொள்கைகளினால் தமிழ்நாட்டில் தமிழ்மக்களின் வாழ்வாதாரத்தில், தமிழ் மொழி வளர்ச்சியில் ஏற்படுத்திய முன்னேற்றத்தை பற்றியும் மக்களிடம் எடுத்து சொல்லுவோம். கழக செயல்வீரர்கள் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து திமுக தலைவரின் வழியில் கட்சியின் வளர்ச்சிக்கு பணியாற்றுவோம் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.


### த.வெ.க. அரசை காப்பாற்றிட குதிரை பேரம்தான் சூடுபிடித்துள்ளது!

# பேச்சு ஆட்சிதான் இருக்கிறது; செயல் ஆட்சி இல்லை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 15 –

த.வெ.க. அரசை காப்பாற்றும் வகையில் குதிரைபேரம்தான் சூடு பிடித்துள்ளது. முதல்வர், அமைச்சர்களின் பேச்சு ஆட்சிதான் இருக்கிறது. செயல் ஆட்சி இல்லை என்று ‘தினகரன்’ நாளேடு விமர்சித்துள்ளது.



தினகரன்
ஜூலை 14, 2026 செவ்வாய்க்கிழமை
குதிரை பேரம் விஸ்வரூபம்

இது குறித்து ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசியலில் அடிக்கடி கேட்கப்படும் ஒரு சொல் தான் குதிரை பேரம். குதிரை பேரம் என்ற வார்த்தை 1820ம் ஆண்டில் இருந்தே புழக் கத்தில் இருந்து வருகிறது. கடந்த காலத்தில் போக் குவரத்து, போர் எனப் பல்வேறு விஷயங்களுக்கு அதிகம் பயன்படுத் தப்பட்டவை குதிரைகள் தான்.

இதனால், குதிரைகள் விலைமதிப்பு மிக்கவை. எனவே, குதிரை வியாபாரிகள் பலரும் தங்களது குதிரைகளை விற்கவும், வாங்கவும் புத்திசாலித்த னத்தை பயன்படுத்தி விலை பேரம் பேசுவார்கள்.

அதைப்போலவே, மாற்று கட்சிகளின் எம்.எல்.ஏ. அல்லது எம்பிக்களை தங்கள் கட்சிக்கு இழுப்பதற்காக பேரம் பேசுவதை அரசியலில் குதிரை பேரம் என்று சொல்கிறார்கள்.

கட்சி மாறும் எம்.எல்.ஏ.க்கள் சட்ட ரீதியாக மட்டுமல்ல, ஒழுக்க ரீதியாகவும் தவறானதாகும். இது ஏறக்குறைய லஞ்சம் கொடுப்பதற்கு சமம் என்று நடுநிலையாளர்கள் கூறுகின்றனர். குதிரை பேரத்தால் ஜனநாயகத்தின் நிலைத் தன்மை பாதிக் கப்படுகிறது.

மக்கள் ஒரு வேட்பாளரை ஒரு கட்சியின் கொள்கையை நம்பி தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் அந்த பிரதிநிதி பின்னர் பணம் அல்லது பதவிக்காக வேறு கட்சிக்கு ஆதரவளித்தால், அது மக்களின் நம்பிக்கைக்கு செய்யும் துரோக மாக பார்க்கப்படுகிறது.

இதனால், அரசியல் நிலைத் தன்மை குலைவது, ஊழல் அதிகரிப்பது, அரசியலில் மக்கள் நம்பிக்கை இழப்பது போன்ற பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகிறது.

தமிழகத்தில் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களில் வெற்றி பெற்றது.

எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை. ஆட்சி அமைக்க மொத்தம் 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகள் விஜய் கட்சிக்கு ஆதரவு அளித்தன. ஆனாலும் அதிமுக எம் எல்ஏக்களை த.வெ.க. களவாடு கிறது. இதுவரை அ.தி.மு.க.வை சேர்ந்த 6 எம்.எல்.ஏ.க்கள், தங்க ளது பதவியை ராஜினாமா செய்து விட்டு, தவெகவில் இணைந்து உள் ளனர். தொடர்ச்சியாக, முன்னணி நிர்வாகிகளும் இணைந்தனர்.

இந்நிலையில், மக்கள் மாளிகையில் ஆளுநர் ஆர்.வி.அர்லேகரை சந்தித்து தவெக அரசு குதிரை பேரத்தில் ஈடுபட்டு ஆட்சியை தக்க வைக்கும் செயலில் ஈடுபடுவதாக திமுக, அதிமுக, பாஜ ஆகிய கட்சிகள் பரபரப்பு குற்றச்சாட்டு களை கூறியுள்ளன. தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில், தலைமை செயலகத்தை கட்சி அலுவலகம் போல மாற்றி, எதிர்க்கட்சி எம் எல்ஏக்களை குறி வைத்து குதிரை பேரம் செய்வது குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என அக்கட்சிகள் கோரியுள்ளன.

இந்நிலையில் லஞ்ச ஒழிப்புத் துறைக்கு தி.மு.க. புகார் கடிதம் அனுப்பி உள்ளது. அதில் அ.தி. மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்த 6 பேர் பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் இணைந்துள்ளனர்.

தி.மு.க. எம்.எல்.ஏ. ஆஸ்டினிடம் த.வெ.க.வினர் குதிரை பேரம் நடத்தியுள்ளனர். அனிதா ராதாகிருஷ்ணனை கைது செய்து த.வெ.க.வில் இணையுமாறு வற்புறுத்தியுள்ளனர். கட்சியில் மாற தவெகவினர் தன்னை அணுகியதாக எம். ஆர். விஜயபாஸ்கர் வெளிப்படையாக கூறியுள்ளார்.

இந்த புகாரின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிந்து தீவிர விசாரணை நடத்த வேண்டும் என அதில் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

த.வெ.க. அரசு அமைந்து 2 மாதங்கள் உருண்டு ஓடிவிட்டது. முதல்வர், அமைச்சர்களின் பேச்சு ஆட்சி தான் இருக்கிறது. செயல் ஆட்சி இல்லை. அரசை காப்பாற்றும் நோக்கத்தில் அடுத்தடுத்து செயல்படும் தவெக அரசின் குதிரை பேரம் விவ காரம் தற்போது சூடுபிடித்துள்ளதால் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குற்றவாளிகளின் கூடாரம் த.வெ.க!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!

சென்னை, ஜூலை 15–

மேடை கிடைச்சா போதும் – போதை ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு, ஊழலற்ற அரசியல்னு வாய்கிழிய தத்துவம் பேசுறதும், நிஜத்துல தப்பு பண்றவங்களை எல்லாம் தவெக வாஷிங் மெஷினில் போட்டு தங்களோட தூய்மையான கட்சி நிர்வாகியா மாத்துறதும் தான் விஜய்யோட கொள்கையா? இவங்களோட இந்த இரட்டை வேடத்தையும், இதுக்குத் துணை போற காவல் துறையையும் நாங்க வன்மையா கண்டிக்கிறோம்.




ஈரோடு பவானியில 8 கிலோ குட்கா, 3 கார்கள், பணத்தோடு தவெக செயற்குழு உறுப்பினர் அருண் என்பவரைப் போலீஸ் கையும் களவுமாகப் பிடிச்சி ருக்காங்க. இதே அருணை கடந்த ஒன்றரை டன் குட்கா கடத்துனதுக்காக தி.மு.க. ஆட்சிக் காலத்துல குண்டர் சட்டத்துல தூக்கி உள்ள வச்சாங்க. அப்படிப்பட்ட ஒரு கிரிமினல் பின்னணி கொண்ட ஆளுக்கு தவெக–வுல பெரிய பொறுப்பு கொடுத்ததே தப்பு.

அதைவிட கொடுமை என்னன்னா, இப்போ அவர் தவெக நிர்வாகி ஆயிட்டாருங்கிற ஒரே காரணத்துக்காக, விஜய் கீழ இயங்குற காவல்துறை அவரை இரவோடு இரவா ஸ்டேஷன் பெயில்ல வெளிய விட்டுருக்கு.

சட்டம் யாருக்காக வளைக்கப் படுது? ஒன்றரை டன் குட்கா கடத்துன ஒரு பழைய குற்றவாளி, மறுபடியும் குட்காவோடு மாட்டும் போது எப்படி இரவோடு இரவா ஸ்டேஷன் பெயில் கொடுக்க முடியும்? இதுக்கு பேருதான் சட்டம் தன் கடமையைச் செய்யுறதா? இல்ல அரசியல் செல்வாக்கா?

விஜய்யோட போதை ஒழிப்புக் கொள்கை இதுதானா? போதைப்பொருளை ஒழிப்போம்னு மேடையில உறுதி மொழி எடுக்குறீங்களே விஜய் அவர்களே, இப்போ உங்க கட்சி நிர்வாகியே போதைப்பொருள் கடத்திட்டு வந்து மாட்டியிருக்காரே இதுக்கு உங்க பதில் என்ன? உங்களால ஒரு ...... புடுங்க முடியாதுன்னு மக்கள் பேசுறது நிஜம் தானா?

தப்பு செஞ்சவங்க யாரா இருந்தாலும் அவங்களை உங்க கட்சி வாஷிங் மெஷினில் போட்டுப் புனிதர்களாக்கப் பார்க்காதீங்க. பொதுமக்களோட உயிரோடு விளையாடுற போதைப் பொருள் கடத்தல்காரங்களுக்கு ஆதரவா இருக்குற தவெக–வின் இந்த அரசியலையும், காவல் துறை காட்டியிருக்கிற இந்த மெத்தனப்போக்கையும் சும்மா விட முடியாது. பிணையில் விடப்பட்ட அருண் மீது உடனே கடுமையான பிரிவுகளில் வழக்குப் போட்டு மறுபடியும் சிறையிலடைக்க வேண்டும்.